KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Abteilung Volksschule

27. சித்திரை 2018

குறிப்பிதழ்

**துறைசார் பாடசாலை (Mittelschulen) மற்றும் தொழில்துறைசார் பாடசாலையுடன் கூடியதொழில் புலமை (Berufsfachschulen mit Berufsmaturität) க்கு 2016/17 வருடத்தில் அனுமதி பெறுவதற்குரிய தகவல்கள்**

---

## 1. பெசீர்க் (Bezirks-) - செக்குன்டார் பாடசாலையில் (Sekundarschule) படித்த பிள்ளைகளுக்கு பரீட்சையின்றி அனுமதி கிடைக்கும்.

பெசீர்க் - செக்குன்டார் பாடசாலையில் படித்த பிள்ளைகளின் இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்த தேர்ச்சி அறிக்கையின் புள்ளிகளின் அடிப்படையில் பொருளாதாரத்துறைசார் பாடசாலை (Wirtschaftsmittelschule WMS), கணினித்துறைசார்பாடசாலை (Informatikmittelschule IMS), துறைசார் பாடசாலை (Fachmittelschule FMS) மற்றும் (தொழில்துறைசார் பாடசாலையுடன் கூடியதொழில் புலமை) (Berufsfachschulen mit Berufsmaturität BMS) க்கும் போகலாம்.

பெசீர்க் பாடசாலையில் படித்த பிள்ளைகளுக்குரிய மேலதிக சலுகையாக அவர்களின் இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்த தேர்ச்சி அறிக்கையின் புள்ளிகளின்படி யிம்நாசியத்திற்குப் (Gymnasium) போகலாம்.

அனுமதி பெறுவதற்கு பெசீர்க் பாடசாலையில் படித்த பிள்ளைகளுக்கும் செக்குன்டார் பாடசாலையில் படித்த பிள்ளைகளுக்கும் ஒரே பாடங்களே கவனத்தில் எடுக்கப்படும்.

நடுநிலைப் பாடசாலைகளில் (Gymnasium, WMS, IMS, FMS) மாணவ- மாணவியர் உள் நுழையும் போது 18 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் படுவார்கள். 18 வயதினை நிறைவு செய்த அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவ- மாணவியர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள்.

## 2. தற்காலிக மற்றும் முடிவான அனுமதி

பிள்ளைகள் கடைசிவருட இறுதிக்கு முதல் தவணையில் (இடைக்கால அறிக்கையில்) கோரப்படும் தகைமை-களை (3. மற்றும் 4ம் தரவுகளைப் பார்க்க) அடைந்த பட்சத்தில் தற்காலிகமாக யிம்நாசியம் பொருளாதாரத் துறைசார் பாடசாலை கணினித்துறைசார்பாடசாலை மற்றும் துறைசார் பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவார்கள். அதன் அர்த்தம் என்னவெனில் தொடங்கும் வகுப்பில் முதலாவது தவணைக்குள் சித்தி பெற்று அந்த தற்காலிகமாகக் கற்கும் கால எல்லையை அகற்ற வேண்டும்.

பிள்ளைகள் கடைசி வருட இரண்டாம் தவணையில் (வருடாந்தத் தேர்ச்சி அறிக்கை) கோரப்படும் தகைமை-களை அடைந்த பட்சத்தில முடிவாக யிம்நாசியம், பொருளாதாரத்துறைசார் பாடசாலை, கணினித்துறைசார்பாட-சாலை மற்றும் துறைசார் பாடசாலைக்கு அனுமதி பெறுவார்கள்.

தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற கோரப்படும் தகைமைகளை கடைசி வருட முதல் தவணையில் அடைந்தால் தற்காலிகமாகவும் கடைசி வருட இரண்டாம் தவணையில் அடைந்தால் முடிவாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவார்.

**3. பெசீர்க் பாடசாலை மாணவர்களிடம் யிம்நாசியம் பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினியில் பாட-சாலைஇ துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற கோரப்படும் தகைமைகள்**

பெசீர்க் பாடசாலை மாணவர்கள் பரீட்சையின்றி யிம்நாசியத்திற்கு அனுமதி பெற வேண்டுமாயின் பாடசாலைக் கடைசிவருடத்தில் கீழுள்ள தகைமைகளை அடைந்திருக்கவேண்டும்:

- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையில் கணிதபாடத்திற்கும் டொச் மொழிக்கும் குறைந்தது 4,0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும்.
- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையின் சராசரிப்புள்ளிகளாகக் குறைந்தது 4,7 எடுத்திருக்க வேண்டும். இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையில் கணிதபாடம் மற்றும் டொச் மொழியின் புள்ளிகள் இருமடங்காக்கப்பட்டே சராசரிப்புள்ளிகள் கணிக்கப்படும்.

பெசீர்க் பாடசாலை மாணவர்கள் பரீட்சையின்றி பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார் பாட-சாலை, துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற வேண்டுமாயின் பாடசாலைக் கடைசிவருடத்தில் கீழுள்ள தகைமைகளை அடைந்திருக்கவேண்டும்:

- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையில் கணிதபாடத்திற்கும் டொச் மொழிக்கும் குறைந்தது 4,0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும .
- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையின் சராசரிப்புள்ளிகளாகக் குறைந்தது 4,4 எடுத்திருக்க வேண்டும். கணிதபாடத்திற்கும் டொச் மொழிக்கும் புள்ளிகள் இரு மடங்காக்கப்பட்டே சராச-ரிப்புள்ளிகள் கணிக்கப்படும்.

**சராசரிப் புள்ளிகளைக் கணிப்பிடுதல்**

சராசரிப்புள்ளிகள் கீழுள்ள புள்ளிகளிலிருந்து கணிப்பிடப்படும்:

a) இடைக்கால அறிக்கையின் புள்ளிகள் கடைசி வருட வகுப்பின் வருடாந்த அறிக்கையில் கணிதம் (இரு மடங்காகக் கணிப்பிடப்படும்), டொச் மொழி (இருமடங்காகக் கணிப்பிடப்படும்), பிரெஞ்ச், ஆங்கிலம், வரலாறு உயிரியல், இரசாயனவியல்

b) படம் வரைதல்/ சங்கீதம் / விளையாட்டும் உடலசைவும் ஆகிய மூன்று பாடங்களிலும்: இதில் கூடிய புள்ளிகள் பெற்ற இரு பாடங்களின் புள்ளிகள் இடைக்கால அறிக்கையிலும் கடைசி வருடத்தின் வருடாந்த அறிக்கையிலும் கணக்கில் கொள்ளப்படும்.

c) கடைசிக்கு முதல் வருட வருடாந்த அறிக்கையில் புவியியல், பௌதிகவியல் பாடங்களின் புள்ளிகளும் இருக்கும்.

**4. செக்குன்டார் பாடசாலை மாணவர்களிடம் பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார் பாட-சாலை, துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற கோரப்படும் தகைமைகள்**

செக்குன்டார் பாடசாலை மாணவர்கள் பரீட்சையின்றி பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார்பாடசாலை, துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற வேண்டுமாயின் பாடசாலைக் கடைசிவருடத்தில் கீழுள்ள தகைமைகளை அடைந்திருக்க வேண்டும்:

- இடைக்கால அறிக்கையிலும் வருடாந்த அறிக்கையிலும் கணிதபாடத்திலும் டொச் மொழியிலும் குறைந்தது 4.0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும்.
- இடைக்கால அறிக்கையிலும் வருடாந்த அறிக்கையிலும் குறைந்த சராசரிப்புள்ளிகளாக 5.3 ஆவது எடுத்திருக்க வேண்டும். இங்கு கணிதமும் டொச் மொழியும் புள்ளிகள் இரு மடங்காக்கியே சராசரிப்புள்ளிகள் கணிக்கப்படும்.

**சராசரிப்புள்ளிகள் கணிக்கப்படும் முறை**

சராசரிப்புள்ளிகள் கீழுள்ள புள்ளிகளிலிருந்து கணிக்கப்படும்:

a) இடைக்கால அறிக்கையிலும் வருடாந்த அறிக்கையிலும் உள்ள பாடங்கள் கணிதம் (இருமடங்காக்கப்படும்) டொச் மொழி (இருமடங்காக்கப்படும்) பிரெஞ்ச் ஆங்கிலம் சரித்திரவியல் புவியியல் உயிரியல் பௌதீகவியல் இரசாயனவியல்

b) படம் வரைதல் / சங்கீதம் / விளையாட்டும் உடலசைவும் ஆகிய மூன்று பாடங்களிலும்: இதில் கூடிய புள்ளிகள் பெற்ற இரு பாடங்களின் புள்ளிகள் இடைக்கால அறிக்கையிலும் கடைசி வருடத்தின் வருடாந்த அறிக்கையிலும் கணக்கில் கொள்ளப்படும்.

c) பாடசாலை உள்ளக ஒழுங்கின்படி: சரித்திரவியல் புவியியல் உயிரியல் பௌதீகவியல் அல்லது இரசாயனவியல் பாடங்கள் பாடசாலைக் கடைசி வருடத்தில் படிப்பிக்கப்படுவதில்லை ஆயினும் கடைசிக்கு முதல் வருடப்புள்ளிகளே வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையில் போடப்படும்

## 5. அனுமதிப்பரீட்சை

இந்த அனுமதிப் பரீட்சை தனியார் பாடசாலைகளிலிருந்து வரும் மாணவர்கள் அல்லது அறோ மாநிலத்திற்குப் புதிதாகக் குடிவந்தவர்கள் மற்றும் கோரப்பட்ட தகைமைகளை அடைய முடியாத மாணவர்களுக்கும் அவர்கள் விரும்பினால் எடுக்கலாம்.

யிம்நாசியம், பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார்பாடசாலை மற்றும் துறைசார் பாட-சாலைக்குப் போவதற்கான அனுமதிப் பரீட்சையை பெசீர்க் - செக்குன்டார் பாடசாலையின் கடைசி வருடம் முடிந்த பின்பு அடுத்த வருடம் எழுதலாம். ஆனால் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு எழுதும் அனுமதிப் பரீட்சையை கடைசி வருடத்திலேயே எழுதலாம். எல்லா அனுமதிப் பரீட்சைகளும் டொச் பிரெஞ்ச் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களை எழுத்து மூலம் கொண்டதாகும்

பெசீர்க் பாடசாலைப் பிள்ளைகள் யிம்நாசியத்திற்குப் போவதற்குரிய அனுமதிப் பரீட்சையை எழுதுவது போல செக்குன்டார் பாடசாலைப் பிள்ளைகள் பெசீர்க் பாடசாலை தரத்திற்குச் சமமான தகுதியுடைய வேறு பாட-சாலைகளில் (அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள்) படித்து அதை நிருபித்தால் மட்டுமே யிம்நாசிய அனுமதிப்பரீட்சை எழுதலாம்.

## 6. பதிவுசெய்தல்

பெசீர்க் - செக்குன்டார் பாடசாலைப் பிள்ளைகள் கடைசி வருடத்தின் போது பெற்றோரின் சம்மதத்துடன் 28. பெப்ரவரி வரை கீழுள்ள பதிவு தளத்தூடாக Departements Bildung, Kultur und Sport (www.ag.ch/mit-telschulen > Schultyp > Anmeldung) விரும்பிய துறைசார்கல்விக்குப் பதிவு செய்யலாம்..

## 7. மேலதிக தகவல்கள்

மேலதிக தகவல்களை இணையத்தளம் www.ag.ch/bildung > Beurteilung & Übertritte இலும் மற்றும் www.schulen-aargau.ch > Beurteilung & Übertritte இலும் காணலாம்.

மே மாதம் 2016 தொடக்கம் இணையத்தளம் Schulportal (www.schulen-aargau.ch > Beurteilung & Über-tritte) இல் வந்த படிவத்தில் எடுத்த சராசரிப்புள்ளிகளைக் கொண்டு எந்தத் துறைசார்கல்வி (யிம்நாசியம், பொருளாதாரத்துறைசார்கல்வி, கணினித்துறைசார்கல்வி தொழில்துறைசார்கல்வி) மற்றும் தொழில்துறைசார் பாட-சாலையுடன் கூடியதொழில் புலமை கற்கலாம் எனவும் கணிக்கலாம்.